# குடிநுழைவு தடுப்பு முகாம்களில் 1,355 பேருக்கு கோவிட்-19






கோலாலம்பூர், டிச. 11-
கடந்த மே முதல் தேதி தொடங்கி குடிநுழைவுத்துறையின் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 1,355 பேருக்கு கோவிட்-19 உறுதிசெய்யப்பட்டிருந்ததாக மக்களவையில் தெரிவிக்கப்பட்டது.

லங்காப் தடுப்பு முகாமில் 481 பேருக்கு கோவிட்-19 கண்டிருந்ததாக உள்துறை துணையமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் இஸ்மாயில் முகமட் சைட் தெரிவித்தார். செமினி தடுப்பு முகாமில் 127 பேருக்கும் கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையத் தடுப்பு முகாமில் 77 பேருக்கும் பெலாந்தேக், புத்ராஜெயா, லெங்கேங், ஜூரு ஆகிய தடுப்பு முகாம்களில் தலா 20 பேருக்கும் தொற்று ஏற்பட்டிருந்தது உறுதிசெய்யப்பட்டதாக அவர் விவரித்தார்.

ஆகஸ்டு 29ஆம் தேதி மட்டும் மொத்தம் 650 பேருக்கு கோவிட்-19 தொற்று உறுதிசெய்யப்பட்டதாக அவர் சொன்னார்.

மக்களவையில் கோப்பெங் தொகுதி நம்பிக்கைக் கூட்டணி உறுப்பினர் டாக்டர் லீ பூன் சாய் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

கடந்த ஆகஸ்டு 29ஆம் தேதி வரை 60 ஆயிரத்து 583 கைதிகள் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டனர் என்று குறிப்பிட்ட அவர், இவர்களுள் 829 பேருக்கு கோவிட்-19 கண்டிருந்ததைச் சிறைச்சாலைத் துறை உறுதிசெய்திருந்ததாகச் சொன்னார்.

## மீண்டும் ஜிஎஸ்டி வரியா?

இதற்கிடையே, ஜிஎஸ்டி எனப்படும் பொருள் சேவை வரியை மீண்டும் அறிமுகம் செய்வது குறித்தும் அல்லது வேறு மாதிரியான வரி நடைமுறையைக் கொண்டு வருவது பற்றியும் ஆய்வுசெய்யும்போது அனைத்து அம்சங்களும் கருத்தில் கொள்ளப்படும் என்று நிதி துணையமைச்சர் முகமட் சஹார் அப்துல்லா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நடப்பிலுள்ள எஸ்எஸ்டி எனப்படும் விற்பனைச் சேவை வரியின் பலவீனம், அதோடு 2015இல் அமல்படுத்தப்பட்ட ஜிஎஸ்டி நடைமுறையின் பலவீனம் ஆகிய அம்சங்களும் கருத்தில்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தாக்கம், வாழ்க்கைச் செலவும், பொருட்கள் விலை மீதான பாதிப்பு உள்ளிட்டவையும் அந்த ஆய்வில் கருத்தில்கொள்ளப்படும் என அவர் சொன்னார்.

குளுவாங் தொகுதி நம்பிக்கைக் கூட்டணி உறுப்பினர் வோங் சூ கி எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

நாட்டின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கு ஜிஎஸ்டியை அரசாங்கம் அறிமுகம் செய்யுமா அல்லது வேறு வகையான வரி நடைமுறையைக் கொண்டுவருமா என்று வோங் கேள்வி எழுப்பியிருந்தார்.

## 86 லட்சம் வெள்ளி நிதி ஒதுக்கீடு

உள்ளூர் சமூக இயக்கத்திற்கான நடவடிக்கைகளுக்கு 86 லட்சம் வெள்ளி நிதி ஒதுக்கீடு மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. சில எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அரசு உறுப்பினர்களும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்த போதிலும் அந்த நிதி ஒதுக்கீடு மக்களவைக் கூட்டத்தொடரில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த இயக்கத்தின் நடவடிக்கை அரசியல் தன்மையுடையது என்ற குற்றச்சாட்டை வீடமைப்பு ஊராட்சித்துறை அமைச்சர் ஸுராய்டா கமாருடின் மறுத்தார். நமக்குச் சமூகத் தலைவர்கள் தேவை. சமூகத்திலுள்ள அனைத்துத் தரப்பினரின் நலனைப் பாதுகாப்பதற்கு இவர்களின் சேவை தேவைப்படுகிறது என்று அவர் நாடாளுமன்றத்தில் கூறினார்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவ இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார். இந்த அமைப்புக்கான நிதி ஒதுக்கீடு குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கிடையே இந்த அமைப்பில் நியமனம் பெற்ற 157 பேரில் 101 பேர் ஏன் பெர்சத்து கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று லெம்பா பந்தாய் நம்பிக்கைக் கூட்டணி உறுப்பினர் ஃபாமி ஃபட்சில் அமைச்சர் ஸுராய்டாவிடம் கேள்வி எழுப்பினார்.

மற்ற அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தொண்டூழியர்கள் ஏன் இந்த அமைப்புக்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று அவர் கேட்டார்.

ஒரு கட்சி உறுப்பினர்கள் மட்டும்தான் அதில் சேர்க்கப்படுவார்களா? அல்லது தேசியக் கூட்டணியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் அதில் வாய்ப்பு வழங்கப்படுமா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இந்தப் பணத்தை அரசு மருத்துவமனை துப்புரவுப் பணியாளர்களுக்குக் கொடுக்கலாமே. ஏனெனில் அவர்கள் இன்னும் முதன்மைப் பணியாளர்களாகப் பட்டியலிடப்படவில்லையே எனவும் அவர் கூறினார்.

இது குறித்து தஞ்சோங் காராங் அம்னோ நாடாளுமன்ற உறுப்பினர் டான்ஸ்ரீ நோ ஒமாரும் கேள்வி எழுப்பினார்.

ஒருசில மக்கள் வீடமைப்புத் திட்டங்களில் தாம் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது எனவும் மற்ற வீடமைப்புகளில் இல்லையே... இது ஏன் எனவும் அவர் கேட்டார்.

## விளையாட்டு வீரர்களுக்கு பென்ஷன்

இதற்கிடையே, ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெறக்கூடிய அனைத்து விளையாட்டு வீரர்களுக் கும் பென்ஷன் தொகை வழங்குவது குறித்து இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சு பரிசீலிக்கும் என்று அதன் அமைச்சர் டத்தோஸ்ரீ ரிஸால் மெரிக்கான் மக்களவையில் கூறினார்.

ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெறுவோருக்கு மட்டும் பென்ஷன் தொகை வழங்கப்படும் நிலையில் அந்தப் போட்டிக்குத் தகுதிபெறுவோருக்கும் அந்தச் சலுகையை வழங்க பரிசீலிக்கப்படும் என்றார் அவர். இது தொடர்பில் மலேசிய ஒலிம்பிக் மன்றம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுச் சங்கங்களுடன் அமைச்சு பேச்சு நடத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான அனைத்து விவரங்களும் அமைச்சரவையின் பார்வைக்குக் கொண்டுசெல்லப்படும் என்று தமது அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் நடந்த விவாதத்தின்போது அவர் கூறினார்.

உலக முன்னாள் கார் பந்தயச் சாம்பியனான கரம்ஜிட் ஜிங் எதிர்நோக்கி வரும் சிரமங்கள் குறித்து உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

இந்த ஆண்டு போட்டிகள் நடத்தப்படாத நிலையில் கரம்ஜிட் சிங் மிகவும் சிரமப்படுகிறார். கோவிட்-19 நெருக்கடி அவரை வெகுவாகப் பாதித்திருக்கிறது.

வருமானத்தை ஈட்ட கிரேப் வாகனம் செலுத்துவதற்காக அவர் தனது புரோட்டோன் வாஜா 1.6 லிட்டர் மெனுவல் காரை 7,500 வெள்ளிக்கு விற்றுள்ளார்.

அவர் புரோட்டோன் சாகா 1.3 லிட்டர் மெனுவல் காரை வாங்கி கிரேப் ஓட்டுநர் ஆகியிருக்கிறார்.

## பெரும்பான்மை இல்லையா?

இதற்கிடையே, பிரதமர் டான்ஸ்ரீ முஹிடின் யாசின் மக்களவையில் பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை இழந்துவிட்டார் அல்லது அவர்களின் ஆதரவைப் பெறவில்லை எனும் பிரச்சினை எழவே இல்லை என்று பிரதமர்துறை (நாடாளுமன்றம் - சட்டம்) அமைச்சர் டத்தோ தக்கியுடின் ஹசான் நேற்று மக்களவையில் தெரிவித்தார்.

25 நம்பிக்கையில்லாத் தீர்மானங்களும் இரண்டு நம்பிக்கைத் தீர்மானங்களும் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. ஆனால், இவற்றை விரைந்து தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏதும் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்க விஷயங்களுக்குத்தான் இப்போது முன்னுரிமை அளிக்க வேண்டும். அந்த அடிப்படையில் பாகோ நாடாளுமன்ற உறுப்பினரான முஹிடின் பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டார் என்ற பிரச்சினையே எழவில்லை என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

பாசீர் கூடாங் நம்பிக்கைக் கூட்டணி உறுப்பினர் ஹசான் அப்துல் கரீம் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார். பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானங்களும் இரண்டு நம்பிக்கைத் தீர்மானங்களும் எப்போது மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்படும் எனவும் எப்போது வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் ஹசான் கேள்வி எழுப்பினார்.

## அவசர நிதி உதவித் தேவை

எனது தொகுதியிலுள்ள பாடாங் பெசாரில் வலுப்படுத்தப்பட்ட எம்சிஓ அமல்படுத்தப்பட்டிருப்பதால் சிரமப்படும் மக்களுக்கு அரசாங்கம் அவசர நிதி உதவி வழங்க வேண்டும் என்று பாடாங் செராய் நாடாளுமன்ற உறுப்பினர் கருப்பையா முத்துசாமி நேற்று மக்களவையில் கோரிக்கை விடுத்தார்.

அந்தப் பகுதியிலுள்ள பலர் உணவுக்கே சிரமப்படுகின்றனர். இஎம்சிஓ உத்தரவு
காரணமாக அப்பகுதி மக்களு
பிள்ளைகளும் அவதிப்படுகின்
அவர் குறிப்பிட்டார்.
ஆகவே என் தொகுதியிலுள்
குடும்பத்திற்கும் அரசாங்கம்
வெள்ளி நிதியுதவி வழங்கும்
கேட்டுக்கொள்கிறேன் என்று
இஎம்சிஓ பகுதிகளில் விவசா
யுள்ளது. ஆனால், பொருட்கள
அதிகமாக இருப்பதாக எனக்கு
கிடைத்துள்ளன என்று அவர்
சில குடும்பங்கள் குழந்தைகளு
பால்மாவு வாங்கவும் இதர உ
வாங்கவும் கூடச் சிரமப்படும்
உள்ளனர் என அவர் கூறினார்

## தேசிய ஒருமைப்பாட்டு

தேசிய ஒருமைப்பாட்டு ந
திட்டம் 2021 -2025 தற்போது
தயார் பணியில் உள்ளது என்
ஒருமைப்பாட்டுத்துறை அமை
ஹலிமா முகமட் சாதிக் மக்கள
கேள்வி பதில் நேரத்தின்போது
பல்வேறு வளங்களைப் பயன்
தொடர்பான ஆவணங்கள் த
கின்றன. பொதுமக்கள், தனி
அரசுசாரா அமைப்புகள், நாடு
உள்ள அரசுப் பணியாளர்கள்
கருத்துகளும் பெறப்பட்டுள்ள
குறிப்பிட்டார்.
ருக்குன் நெகாராவின் 5 கோ
படையில் இந்தத் திட்டத்தின்
கிறது. ஆவணங்களைத் தய
கருத்துகளும் 5 லட்சத்து 10
விவரங்களும் திரட்டப்பட்ட
கூறினார்.

## கடுமையான வாக்கு

இதற்கிடையே நாடாளுமன்
அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு
படுவதற்கு முன்பு கடுமைய
ஏற்பட்டது.
ஆயினும் பெரும்பான்மை
வாக்கெடுப்பு மூலம் அந்த நி
நிறைவேற்றப்பட்டது. சுகாத
அமைச்சர் டத்தோ டாக்டர் நு
நிதி ஒதுக்கீடு மீதான விவாத
செய்தபோது அவையில் இரு
மன்ற உறுப்பினர்கள் பலர்
கேள்வி தொடுத்தனர்.
விவாதத்தின்போது எழுப்
கேள்விகளுக்கு அஸ்மி பதில
என அவர்கள் கோரிக்கைவி
விவாதத்தின்போது சுகாதா
டத்தோஸ்ரீ டாக்டர் அடாம் ப
இல்லை எனவும் கேள்வி எ
நாடு கோவிட்-19 நெருக்கடி
யுள்ள நிலையில் அமைச்சுக்
கீடு மீதான விவாதத்தில் அ
மல் போனது ஏன் எனவும் உ
கேள்விக் கணைகளைத் தொ
ஆனால், அமைச்சு சார்பில்
பதில் அளிக்கும் தகுதி எனக்
அஸ்மி தெரிவித்தார்.
ஆகவே அமைச்சர் அவையி
குறித்து கேள்வி எழுப்பக்கூட
அவர். டிங்கி நிலவரம் பற்றி
கேள்விக்குப் பதிலளித்த அ
ஜனவரி தொடங்கி டிசம்பர்
87,279 பேருக்கு டிங்கி காய்
தது என்றார்.
கடந்தாண்டு இதே காலக
எண்ணிக்கை 121,983 ஆக
ஆண்டு டிங்கி பாதிப்பு 28.4
குறைந்திருக்கிறது என்று அ
இதே காலகட்டத்தில் இந்த
யால் 141 பேர் மரணமுற்ற
இந்த எண்ணிக்கை 171 ஆ
ஆண்டு டிங்கி மரணப் பதி
அளவில் குறைந்திருக்கிறது

Akhbar : Makkal Osai

Tarikh : 11 Disember 2020

Muka surat : 5

Tajuk : **National Unity Action Plan**

Rumusan : The National Unity Action Plan 2021-2025 is in the final stage of preparation, the Dewan Rakyat was told today. National Unity Minister Datuk Halimah Mohamed Sadique said the document was prepared based on feedback from the public, the private sector, non-governmental organizations, and government staff nationwide. Its strategic core is based on the five principles of the Rukun Negara. Feedback from 51,380 stakeholders and 510,000 data inputs was gathered for our analysis in creating the document.